00021

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப்பரீட்சை

**EPD3233/ESD1133** – கலைத்திட்ட முறைமையும் செய்கையும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 16.07.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 11.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. "சுற்றாடல்" என்னும் பத்தினை வரையறுக்க.
2. சுற்றாடலை பிரதானமாக மூன்றாக வகைப்படுத்தலாம்" அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.
3. "ஆசிரியர் எப்போதும் பிள்ளைகளுக்கு சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தினை கற்பதற்கு வழிகாட்ட வேண்டும்" இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடைக்கான **மூன்று** (03) காரணங்களைத் தருக.
4. "தொடர்பாடல்" என்னும் பதத்தினை விளக்குக.
5. "ஒன்றிணைந்த அணுகுமுறை" என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
6. முறைசார் கணிப்பீடு, முறைசாரா கணிப்பீடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.
7. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்தின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பயன்படுத்தக் கூடிய கல்வித்தொழில்நுட்ப சாதனங்கள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.
8. சுற்றாடலைப் பற்றிய மகாத்மா காந்தியின் கருத்துக்களை சுருக்கமாக விளக்குக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்தின் வரலாற்றில் ஏற்பட்ட முக்கியமான விருத்திகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

**ii.** மேலே நீங்கள் குறிப்பிட்ட முக்கிய திருப்பு முனைகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து அதனை ஒரு முக்கிய திருப்புமுனையாகக் கருதுகிறீர்கள் எனக் குறிப்பிட்டதற்கான காரணங்களை முன்வைக்க.

(08 புள்ளிகள்)

10.

**i.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தில் காணப்படும் ஏனைய பாடங்களில் இருந்து சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடம் எவ்வாறு வேறுபடுகின்றதென்பதனை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

11.

**i.** சுற்றாடலைப் பற்றிய **இரண்டு** (02) தத்துவார்த்தக் கருத்துக்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**ii.** மேலே நீங்கள் குறிப்பிட்ட தத்துவார்த்தக் கருத்துக்களில் ஏதாவது ஒன்றினை தெரிவு செய்து அது எவ்வாறு முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறையில் முக்கியத்துவம் வாய்ந்ததென விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

**i.** ஆரம்பக் கல்வியில் உள்ள சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்தில் பயன்படுத்தக் கூடிய கற்றல் சாதனங்கள் **இரண்டினைப்** (02) பெயரிடுக.

(02 புள்ளிகள்)

**ii.** அச்சாதனங்களை சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

அ) மேலே நீங்கள் குறிப்பிட்ட கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் **இரண்டினைக்** (02) குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ஆ) இப்பிரச்சினையை இழிவளவாக்க எடுக்ககக்கூடிய பொருத்தமான நடவடிக்கைகளை முன்மொழிக.

(06 புள்ளிகள்)

13.

**i.** ஆராய்தலினூடாகக் கற்றல் என்பதால் நீங்கள் கருதுவது யாது?

(04 புள்ளிகள்)

**ii.** ஆராய்தல் முறையினூடாகச் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தினைக் கற்பிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய **இரண்டு** (02) கற்றல் அனுபவங்களை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** மேலே நீங்கள் குறிப்பிட்ட அனுபவத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -